O.S.170/2019
PW1 – நாகேஸ்வரி
நாள் 06.10.2025.

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

**1.** தற்போது எனக்கு 60 வயது இருக்கும் என்றால் 58 வயது. எனக்கு எத்தனை வயதில் திருமணம் நடந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு திருமணம் நடந்தது 1982 என்றால் வருடம் எனக்கு தெரியாது. எனது அண்ணன் 1ம் பிரதிவாதி பாலசுப்பிரமணியனும் அவருடை மனைவி 3ம் பிரதிவாதி மன வருத்தம் காரணமாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். சுமார் 7,8 ஆண்டுகளாக பிரிந்து தான் இருக்கிறார்கள். எனது தகப்பனார் இறந்து எவ்வளவு நாட்கள் கழித்து எனது அண்ணன்கள் சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

2. எனது அண்ணன்கள் இரண்டு பேரும் எனது தகப்பனார் இறந்து சிறிது காலத்திலேய சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டார்கள். நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் வாய்மொழி பாகம் பிரித்துக்கொண்ட தேதியை குறிப்பிடாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அண்ணன் அவருடைய மனைவியான 3ம் பிரதிவாதிக்கு 2 சொத்துக்களை இனாம் செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்தது எப்போது தெரியும் என்றால் எனது அண்ணன்கள் பாகம் பிரித்துக்கொடுக்க மறுத்தபோது தான் தெரியும்.

3. தாவா சொத்துக்களை பொறுத்து நான் வரிகட்டியுள்ளேனா என்றால் இல்லை எனது அண்ணன்கள் கட்டியுள்ளார்கள். தாவா சொத்துக்களில் நான் கூட்டு அனுபவத்தில் இருப்பதை நிரூபிப்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்குரையில் உள்ள சொத்துவிவரங்கள் அனைதும் சரிதானா என்றால் சரிதான். அதை நான் படிக்க கேட்டு சரி என தெரிந்து கொண்ட பின்னர் தான் கையொப்பம் செய்தேன். மொத்த தாவாச்சொத்துக்களை பொறுத்து எனக்கும், எனது அண்ணன்களுக்கும் தலா 3ல் 1 பாகம் உள்ளது என்றால் சரிதான்.

4. எனது அண்ணன் 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எனது தகப்பனார் சொத்தை பொறுத்து 3 ல் 1 பாகம் ஒதுக்காமல் 2 ல் 1 பாகத்தை எனது அண்ணன்

அவரது மனைவிக்கு எழுதி வைத்ததால் அதை எதிர்த்து ஆட்சேபனை செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா 13 லக்க சொத்துக்களில் 2 சொத்துக்களில் மட்டும் தான் 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். மீதமுள்ள சொத்துக்களை பொறுத்து நான் எனது பாகத்தை வாங்கி கொள்ள தயாராக இருக்கேனா என்றால் இல்லை. மொத்த சொத்துக்களை பொறுத்து பாகம் வேண்டும்.

5. எனது அண்ணனான 1ம் பிரதிவாதி, தனது பாகமாக கூடுதலாக 3ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்ததன் மூலம் எனக்கு குறைவு கொள்ளும் பகுதிக்கு 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்படும் வேறு சொத்துக்களிலிருந்து எனது பாகத்தை எடுத்துக்கொள்ள தயாராக இருக்கேனா என்றால் இல்லை. எனது அம்மா வழி சொத்துக்களிலுள்ள 3 சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி 3 சொத்துக்களும் எனது அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு பாகமாக சேர வேண்டிய சொத்துக்களை எனது கைவசம் வைத்துக்கொண்டு அந்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்காமல் மோசடியாக வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. 1ம் பிரதிவாதியான எனது அண்ணன் அவரது மனைவியை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் என் மூலமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் எனக்கு சேரவேண்டிய பாகங்களை தனியாக அனுபவம் செய்து வருவதால் தாவாவழக்கிலுள்ள சொத்துக்களை பொறுத்து எவ்வித பாகமும் பெற தகுதியுடையவர் அல்ல என்றால் சரியல்ல. எனது நோக்கம் பாகப்பரிவினை பெறுவது அல்ல என்றாலும், 3ம் பிரதிவாதியிடமிருந்து சொத்துக்களை அபகரிப்பதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ள 2 சொத்துக்களை பற்றிய விவரம் எழுதி கொடுத்த காலத்திலேயே எனக்கு தெரியும் என்றாலும் நான் காலம் கடந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. இந்த 2 சொத்துக்களை 3ம் பிரதிவாதி 07.11.2017ந் தேதி கதிர்வேல் என்பவருக்கு அடைமானமாக வைத்த விவரமும், 09.02.2021 தேதியில் அதை திருப்பிய விவரமும் எனக்கு ஏற்கனவே தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 3ம்

பிரதிவாதிக்கு எழுதி வைத்துள்ள 2 சொத்துக்களையும் 3ம் பிரதிவாதி தனித்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்துக்களில் கூட்டு அனுபவத்தில் இல்லாத நிலையில் கூட்டு அனுபவத்தில் இருப்பது போல் நீதிமன்ற கட்டணம் செலுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கை தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

8. 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்துள்ள சொத்துக்களை வேறு ஒரு நபர்களுக்கு 3ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் உள்ள போது விற்பனை செய்துவிட்டார். மேற்படி 2 சொத்துக்களும் 3ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதால் விற்பனை உள்ளிட்ட வில்லங்கள் செய்ய 3ம் பிரதிவாதிக்கு உரிமை உண்டு என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் நான் பிராதில் கோரியுள்ளது போல் எந்த பாகமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1,2 பிரதிவாதிகளின் பாகச்சொத்துக்கள் என்பதாலும், ஏற்கனவே பாகம் ஏற்பட்டுள்ளது என்பதாலும் எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி